பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 10 செவ்வாய்க்கிழமை 23.03.2021 கதிர் 138

**இது ரகசியம் அல்ல!**

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்காவிற்கு நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் விதிக்கப்பட்ட நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு எதிராக செய்து கொள்ளப்பட்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டது

பக்கம்02 »

# இலங்கை மீதான பிரேரணை இன்று நிறைவேறுவது உறுதி

## பெரும் பரபரப்புக்கு மத்தியில் வாக்கெடுப்பு

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பிரிட்டன் தலைமையிலான 6 நாடுகள் இணைந்து முன்வைத்துள்ள பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது.

குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்று நடைபெற இருந்த நிலையில், நிகழ்ச்சி நிரலின் கால வரையீடு சிக்கல் காரணமாக இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

☞ 2



## ஜெனிவாவில் ஆதரவைத் திரட்ட இறுதிநேர முயற்சியில் இலங்கை



ஜெனிவாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பின்போது தமக்கு ஆதரவாக வாக்குகளை திரட்டுவதற்காக இலங்கை அரசு வெளிநாடுகளுடன் இராஜதந்திர ரீதியிலான கலந்துரையாடல்களை கடந்த தினங்களில் நடத்தியுள்ளது.

சீனாவின் உதவியுடன் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகள், பாகிஸ்தானின் உதவியுடன் இஸ்லாமிய நாடுகள், கியூபாவின் உதவியுடன் தென் அமெரிக்க நாடுகள் ஆகியவற்றின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை அரசு கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது எனத்

☞ 2

## பதிலளிக்க 3 நிமிடங்களே இலங்கை அரசு அதிருப்தி




ஜெனிவாவில் இலங்கை மீதான பிரேரணைக்குப் பதிலளிப்பதற்காக மூன்று நிமிடங்களே வழங்கப்பட்டுள்ளன எனவும், அது தொடர்பான தமது அதிருப்தியை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அறிவித்துள்ளோம் எனவும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ்

☞ 2

## யாழில் அரச சார்பு போராட்டக்காரர்களுக்கும் மாநகர சபையினருக்கும் இடையில் முறுகல்!

யாழ்ப்பாணம் – நல்லூரில் உணவுதவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கும் அரச சார்பு தரப்பினருக்கும் யாழ். மாநகர சபை உறுப்பினருக்கும் இடையில் நேற்று முறுகல் நிலை ஏற்பட்டது.

நல்லூரில் யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் பொலிஸாரின் பாதுகாப்போடு அனுமதி பெறாது கொட்டகை

☞ 2



## வாழைப்பழத்தால் வந்த தகராறு; கடை ஊழியர் குத்திக் கொலை!

வாழைப்பழத்தின் விலையால் ஏற்பட்ட தகராற்றில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

குருநாகல் பஸ் தரிப்பிடத்துக்கு அருகே உள்ள உணவகம் ஒன்றில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

உணவகத்துக்குச் சென்ற ஒருவர் வாழைப்பழத்தின் விலையைக் கடை ஊழிய

☞ 2

## வடக்கில் மேலும் நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று

### யாழில் பெண்ணொருவர் மரணம்

வடக்கு மாகாணத்தில் மேலும் நால்வருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

இதில் யாழ்ப்பாணத்தில் மூவரும், மன்னாரில்

☞ 2

## ஆயிரம் ரூபாவுக்கு எதிரான மனு மீது 26இல் விசாரணை

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கும் வர்த்தமானியை இரத்துச் செய்யுமாறு கோரி பெருந்தோட்ட நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவினை எதிர்வரும் 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

குறித்த மனு மேன்

☞ 2

## மேலும் 5 பேர் மரணம் கொரோனா காவு 551

இலங்கையில் மேலும் 5 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பண்டாரகம பிரதேசத்தைச் சேர்ந்த, 51 வயதான ஆண் ஒருவரும், வேஉட பிரதேசத்தைச் சேர்ந்த, 78 வயதான

☞ 2

**வேலைவாய்ப்பு**

காலைக்கதிர் பத்திரிகைக்கு காலை, மாலை நேரப் பணியில் கடமையாற்ற பக்க வடிவமைப்பாளர் தேவை

தொடர்புகளுக்கு:- 077 307 8799

## பிரேரணை கொண்டுவர ஆதரவு வழங்கிய 40 நாடுகளில் ஓர் ஆசிய நாடேனும் இல்லை

### அமைச்சர் பீரிஸ் கூறுகின்றார்



இலங்கை மீது ஐ.நா. பிரேரணையைக் கொண்டுவருவதற்கு ஆதரவளித்துள்ள நாடுகளில் ஓர் ஆசிய நாடேனும் இல்லை என்று கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பு தனியார் வானொலி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மீது

☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று நேற்று செய்திகள் வெளியாகின.

உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டு விட்டமையால் அவரின் எதிர்காலம் – நான்கு வருடங்களும் – இனி சிறையில்தான் என்று பலரும் எண்ணத் தலைப்பட்டு விட்டனர். ஆனால் அப்படியல்ல. அவர் வெளியே வருவதற்கு இன்னும் தாராளமாக சந்தர்ப்பங்கள் உண்டு. அதை மேலோட்டமாகப் பார்ப்போம்.

நீதிமன்றத்தை மோசமாக விமர்சித்தமையால் நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில் உயர்நீதிமன்றம் அவருக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

அதை எதிர்த்து அதே உயர்நீதிமன்றத்தில் ரஞ்சன் ராமநாயக்கா சார்பில் மேன்முறையீடு செய்யப்பட்டிருக்கின்றது.

அந்த மேன்முறையீட்டை, மூலத் தீர்ப்பை வழங்கிய அதே நீதியரசர்கள் Chambers இல் கூடி ஆராய்ந்து, மேன்முறையீட்டுக்கு இடமில்லை என்று இப்போது பதிலளித்திருக்கின்றார்கள்.

இந்த வழக்கை திறந்த நீதிமன்றத்தில் எடுத்து அது தொடர்பான அறிவிப்பை வழங்குமாறு ரஞ்சன் ராமநாயக்கா தரப்பு நீதிமன்றத்திடம் கேட்கவிருக்கின்றது.

திறந்த நீதிமன்றத்தில் வேறு நீதியரசர்கள் முன் இந்த மேன்முறையீடு எடுக்கப்படும் போது சட்ட வலுவுள்ள சில வாதங்களை முன்வைப்பதற்கு ரஞ்சன் ராமநாயக்கா தரப்பு காத்திருக்கின்றது.

திறந்த நீதிமன்றத்திலும் மேன்முறையீடு நிராகரிக்கப்படுமானால் – புதிய விசாரணைக்கான சந்தர்ப்பம் மறுக்கப்படுமானால் – மீண்டும் அதே உயர்நீதிமன்றத்தில் மீளாய்வு மனு ஒன்றை சளைக்காமல் சமர்ப்பிப்பதற்கும் ரஞ்சன் தரப்பு தயாராக உள்ளது.

இப்படி மேன்முறையீடு, மீளாய்வு என்று உயர்நீதிமன்றத்தின் முன்னால் மனுக்களை சமர்ப்பித்து உயர்நீதிமன்றத்தையே களைப்பில் ஆழ்த்தும் நிலைப்பாட்டை எடுப்பதற்கு ரஞ்சன் தரப்புக்கு வலுவான சட்ட வாய்ப்புகள், சாதகங்கள் இருப்பதை நாம் அவதானிக்க வேண்டும்.

ரஞ்சன் ராமநாயக்காவுக்கு சிறைத் தீர்ப்பை வழங்கியது உயர்நீதிமன்றம். அதுவே இலங்கையின் மிக உயர்ந்த நீதிமன்றம். அதன் தீர்ப்பை அனைவரும் ஏற்க வேண்டும். அதற்கு மேல் மேன்முறையீடு செய்ய நீதிமன்றங்கள் இல்லை. அப்படியாயின் ரஞ்சன் ராமநாயக்காவின் விடயத்தில் மட்டும் ஏன் உயர்நீதிமன்றத் தீர்ப்பையும் தாண்டி திரும்பவும் அதனிடம் மேன்முறையீடு, மீளாய்வு என்று செல்ல வேண்டும் என்ற நியாயமான கேள்வி எழுகின்றது.

இதற்கு நாம் கடந்த தசாப்பதத்தில் இலங்கையில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின் கருத்தை கவனத்தில் எடுக்க வேண்டும்.

குடியியல், அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பொருத்தனை (ICCPR) என்ற சட்டம் 2007இல் இலங்கையின் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. மேற்படி பெயரில் சர்வதேசப் பட்டயம் ஒன்று உள்ளது. அதில் கையாப்பமிட்ட கொழும்பு அரசு, அந்த விடயத்தை இலங்கை நாடாளுமன்றத்தில் ஒரு சட்டமாக சமர்ப்பித்து நிறைவேற்றவும் வைத்தது.

அந்தச் சட்டத்தில், ஒரு கிரிமினல் குற்றச்சாட்டுக்காகக் குற்றம் சுமத்தப்படுபவர் குற்றவாளியாகக் காணப்படுபவராயின் அதற்கு எதிராக குறைந்த பட்சம் ஒரு தடவையேனும் மேன்முறையீடு செய்வதற்கான வாய்ப்பு அவருக்கு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்காவின் விடயத்தில் அவருக்கு நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனைத் தீர்ப்பு உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது.

ஆனால், அந்தக் கிரிமினல் குற்றத்துக்கான விசாரணையை நடத்தியதும், தண்டனை வழக்கியதும் உயர்நீதிமன்றம்தான். இந்த வழக்கை விசாரித்த முதனிலை நீதிமன்றமும் அதுதான். அதே சமயம் இலங்கையில் இறுதி நிலை நீதிமன்றமும் அதுதான்.

அதன் காரணமாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மேன்முறையீடு செய்யவோ, மீளாய்வு செய்யவோ– வேறு மேனிலை நீதிமன்றங்கள் இல்லை என்பதால் – அதற்கு வாய்ப்பில்லை என்ற முடிவுக்கு வரவேண்டும் என சில தரப்புகள் கருதுகின்றன. ஆனால் அது தவறு.

ICCPR சட்டத்தின்படி, கிரிமினல் குற்றச்சாட்டில் தண்டனை விதிக்கப்படுபவருக்கு அதற்கு எதிராக மேன்முறையீடு செய்ய ஒருவாய்ப்பு நிச்சயம் வழங்கப்பட வேண்டும்.

அதனால் ரஞ்சன் ராமநாயக்காவிற்கு எதிரான தண்டனைத் தீர்ப்பு எங்கேயோ ஓர் உயரிய தளத்தில் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்ற கணக்குக்கு இணங்குவதைத் தவிர உயர்நீதிமன்றுக்கு வேறு வழியில்லை என்றே எனக்குப்படுகின்றது.

அதனால், ரஞ்சன் ராமநாயக்காவுக்கு எதிரான வழக்கு நிச்சயம் ஒரு மறுபரிசீலனைக்கு – மீளாய்வுக்கு – உள்ளாகும் என்று நம்பலாம்.

ரஞ்சன் ராமநாயக்கா தொடர்பில் இன்னொரு வழக்கும் உண்டு. அது மேன்முறையிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ரஞ்சனுக்கு வழங்கப்பட்ட சிறைத்தீர்ப்பு, அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையை இல்லாமலாக்கும் தகைமை பெற்ற தண்டனைத் தீர்ப்பல்ல, அதனால் அவரின் எம்.பி. பதவி பறிகோகவில்லை என உத்தரவிடக் கோரித் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அவ்வழக்கு.

அதிலும்கூட, ரஞ்சன் ராமநாயக்காவுக்கு மிகவும் சாதகமான சட்ட வலிமை உண்டு. அப்படித் தமக்கு சாதகமான ஒரு தீர்ப்பை அதில் அவர் பெறவும் வாய்ப்புகள் உள்ளன.

இவ்விடயத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பார்த்துத் தாம் ஒரு முடிவை மேற்கொள்வார் என சபாநாயகர் அறிவித்திருக்கின்றமை ரஞ்சன் தரப்புக்கு சாதகமான ஓர் அம்சம்.

தொடர்ந்து மூன்று மாதங்கள் நாடாளுமன்றுக்கு சமுகம் தராத காரணத்தினால் ரஞ்சனின் பதவி வரும் 5ஆம் திகதியுடன் பறிபோனாலும் கூட –

தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு ரஞ்சனுக்கு சாதகமாக வருமானால் அவர் சபைக்கு எம்.பியாக வரமுடியும்.

அதேநேரம் உயர்நீதிமன்ற மீளாய்வில் அவருக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பு ரத்தானால் அவர் அதன் பின்னர் சுதந்திர மனிதனாகவும் மீளவும் உலா வர முடியும்.

ஆகவே ரஞ்சன் தரப்பு நம்பிக்கையை முற்றாகக் கைவிடாமல் எதிர்பார்ப்புடன் தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்துவதற்கு முழு வாய்ப்பும் உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. இதுதான் யதார்த்தப்புற நிலைமையாகும்.

– மின்னல் –

## ஜெனிவாவில் ஆதர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் குறிப்பிட்ட நாடுகளின் அரச தலைவர்களுடன் தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகார செயலாளர் ஆகியோர் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து கடந்த நாள்களில் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நாடுகளில் 10 இற்கு மேற்பட்ட நாடுகளின் ஆதரவை இலங்கை உறுதிப்படுத்தியுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளது. அத்துடன் சில நாடுகள் வாக்களிப்பின்போது நடுநிலை வகிக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

## வாழைப்பழத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரிடம் கேட்டுள்ளார்.

வாழைப்பழம் 30 ரூபா என்று ஊழியர் கூற, இருவருக்கும் இடையே வாக்குவாதம் மூண்டுள்ளது.

இதன்போது கோபத்தின் உச்சத்துக்குச் சென்ற நிலையில், வாடிக்கையாளர் உடைந்த போத்தலினால் கடை ஊழியரைத் தாக்கியுள்ளார். பலத்த காயத்துக்குள்ளான கடை ஊழியர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

தாக்கிய நபரைக் குருநாகல் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் நடந்தபோது சந்தேகநபர் மது போதையில் இருந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பிரேரணை கொண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரேரணையை முன்வைப்பதற்கு ஆதரவு வழங்கியுள்ள 40 நாடுகளும் உலகத்தின் ஒரு பகுதியைச் சேர்ந்தவை. அவை முழு உலகையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.

இந்த ஐ.நா. பிரேரணை நீதியை நிலைநாட்டுவதற்காக அன்றி, வெளிநாட்டு சக்திகளின் அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான ஒன்றாகும்.

ஐ.நா. தீர்மானங்கள் வெளிநாடுகளின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான படிமுறை ரீதியான முயற்சியே ஆகும்.

இந்தப் பிரேரணையைக் கொண்டு வந்த நாடுகள் இதற்கு முன்னர் இருந்த நல்லாட்சி அரசைப் பாதுகாத்தன. ஆனால், குறித்த நாடுகள் இப்போது எமது அரசுக்கு எதிராகச் செயற்படுகின்றன – என்றார்.

## யாழில் அரச சார்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைத்து நேற்றுமுன்தினம் முதல் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்று இடம் பெற்று வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்களாலும் கடத்தப்பட்டு, கொல்லப்பட்டோருக்கு நீதி வேண்டும் என வலியுறுத்தி யாழ். சிவில் சமுக அமைப்பு எனும் குழுவினரால் குறித்த அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இந்தநிலையில், நேற்று குறித்த இடத்தில் அனுமதி பெறப்படாது கொட்டகை அமைக்கப்பட்டமை தவறு எனவும், உடனடியாக நேற்று இரவுக்குள் அகற்றுமாறும் தெரிவித்து யாழ்ப்பாண மாநகர மேயரின் எழுத்து மூலமான கடிதம் ஒன்றை வழங்குவதற்கு மாநகர சபை உறுப்பினர் மற்றும் உத்தியோகத்தர்கள் சென்றிருந்தனர்.

மேயரின் எழுத்து மூலமான கடிதத்தை மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் வாசித்துக் காண்பித்தபோது போராட்டக்காரர்களுக்கும் மாநகர சபை உறுப்பினர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது குறித்த இடத்துக்குப் பொலிஸார் சென்று இருதரப்பினரையும் சமாதானப்படுத்தியதோடு நீதிமன்ற அனுமதி பெற்றால் மாத்திரமே இவர்களை இந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்த முடியும் எனத் தெரிவித்தனர்.

## மேலும் 5 பேர் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண் ஒருவரும், நுகதலாவ பிரதேசத்தைச் சேர்ந்த, 78 வயதான ஆண் ஒருவரும், கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த, 68 வயதான ஆண் ஒருவரும், காலி பிரதேசத்தைச் சேர்ந்த, 80 வயதான ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து கொரோனாத் தொற்றால் நாட்டில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 551 ஆக அதிகரித்துள்ளது.

## பதிலளிக்க 3 நிமிட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குணவர்தன தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான விவாதம் நேற்றும் இன்றும் நடைபெறுகின்றது. அதன்பின்னர் இன்று இலங்கை மீதான பிரேரணை மீது வாக்கெடுப்பும் நடைபெறுகின்றது. இந்தநிலையில், அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கை மீதான பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை; ஆதாரமற்றவை. இதை அதிகமான நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

இலங்கை மீதான முதலாவது வரைவில் குறிப்பிடப்பட்டிருந்த பல விடயங்களும், இறுதியாக முன்வைக்கப்பட்ட வரைவில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

பிரிட்டன் தலைமையில் இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டிருந்தாலும், தகவல்களின் ஆதாரமற்ற தன்மை காரணமாக பிரிட்டனுக்குள்ளேயே இந்தப் பிரேரணைக்கு எதிர்ப்பு மேலெழுந்துள்ளது – என்றார்.

## வடக்கில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவரும் கொரோனா நோய்த்தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடங்களில் 294 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே நால்வருக் குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற சிறுநீரகம் பாதிக்கப்பட்ட 63 வயது பெண் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்தார். சுதுமலையைச் சேர்ந்த பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார். – என்றார்.

## ஆயிரம் ரூபாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்தபட்ச சம்பளத்தை ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கும் வகையில் விடுக்கப்பட்ட வர்த்தமானியை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி 20 பெருந்தோட்ட நிறுவனங்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தன.

மனுவிலுள்ள விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக எதிர்வரும் 26ஆம் திகதி மனுவை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஏற்கனவே நெருக்கடி நிலையில் நடத்திச் செல்லப்படுகின்ற பெருந்தோட்ட நிறுவனங்களை அரசின் வர்த்தமானி காரணமாக மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த மனுவில் தொழில் அமைச்சர், தேசிய சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## இலங்கை மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக்கு எதிராக 46/1 வரைவு பிரேரணை மீதான வாக்கெடுப்பு ஜெனிவா நேரப்படி இன்று காலை 9 மணிக்கு நேரம் குறிக்கப்பட்டுள்ளது. அது இலங்கை நேரப்படி பிற்பகல் ஒரு மணியாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது அமர்வில் நேற்றும் இன்றும் இலங்கை உட்பட 9 நாடுகள் மீதான விவாதங்கள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தொடர்பான பிரேரணைக்கு சுமார் 40 நாடுகள் இணை அனுசரணையாளர்களாக கையெழுத்திட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை மேற்குலக நாடுகளாகும்.

இந்த விடயத்தில் இலங்கைக்கு தெற்காசிய நாடுகள் ஆதரவளிக்கலாம் என்பதுடன், பாகிஸ்தான் இலங்கையின் வெளிப்படையான ஆதரவாளராக இருந்து வருகின்றது.

இந்நிலையில், ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவை உள்ளிடக்கிய 'குவாட்' கூட்டணியால் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது என இராஜதந்திர தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்குக்கு எதிரான குவாட் நாடுகளின் சுதந்திர, திறந்த இந்தோ – பசுபிக் கொள்கைக்கு சார்பான நிலைப்பாட்டை எடுக்குமாறு இலங்கை மீது அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது என தென்னிலங்கை ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், அயல் நாடான இந்தியா, இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என்று அரச தரப்பினர் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். ஆனால், தமிழர் தீர்வு விடயத்தில் அதிக சிரத்தை கொண்ட இந்தியா, இலங்கையை எதிர்த்துப் பிரேரணைக்கு ஆதரவாகவே வாக்களிக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது இந்தியா நடுநிலை வகிக்கும் என்று புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இலங்கைக்கு எதிரான பிரேரணை இன்று தீர்மானமாக நிறைவேறுவது உறுதி என ஜெனிவாத் தகவல்கள் அடித்துக் கூறுகின்றன.

# மாகாணசபைத் தேர்தல்களை நடத்த நடவடிக்கை எடுக்குக!

## ஜனாதிபதி, பிரதமருக்கு 'கபே' கோரிக்கை



மாகாணசபைத் தேர்தல் கடந்த மூன்று வருடங்களாக வெறும் பேசுப் பொருளாகவே உள்ளது. ஆகவே அவ் விடயத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் விரைவான தீர்மானத்தை எடுக்க வேண்டுமென சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் வலியுறுத்தி உள்ளது.

"மாகாண சபை தேர்தல் விவகாரம் தொடர்பாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீனிடம் தொடர்புகொண்டு வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மனாஸ் மக்கீன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

"இலங்கையிலுள்ள 9 மாகாண சபைகளினதும் உத்தியோகபூர்வ கால எல்லை நிறைவுக்கு வந்து பல வருடங்களைக் கடந்துள்ளது.

அதாவது மேல் மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம், வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், வட மேல் மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகியற்றின் கால எல்லைகள் நிறைவுக்கு வந்துள்ளன.

இந்நிலையில் குறித்த தேர்தலினை நடத்துவது தொடர்பாக ஒழுங்கான கருத்துக்களை அரசாங்கம் முன்வைக்காமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களே மாகாண சபைத்தேர்தல் தொடர்பாக முரண்பாடான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

மாகாண சபை முறைமை இலங்கை தேர்தல் முறையில் இருக்கின்றபோது, இந்தத் தேர்தலை பல வருட காலமாக நடத்தாமல் இருப்பது ஜனநாயகத்தை கேள்விக்கு உள்ளாக்கும் விடயமாகும்.

எனவே இந்த மாகாண சபைத்தேர்தல் தொடர்பாக விரைவான தீர்மானத்தை எடுப்பது, ஜனாதிபதி மற்றும் பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் முக்கிய பொறுப்பாகும்" - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பல் வைத்தியர்கள் வேலை நிறுத்தம்!

நாடளாவிய ரீதியில் பல்வைத்தியர்களால் நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டுள்ள வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு வவுனியா அரச பல்வைத்திய அதிகாரங்கள் சங்கமும் தமது ஆதரவை தெரிவித்துள்ளது.

அந்தவகையில் வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று (திங்கட்கிழமை) காலை முதல் பல்வைத்தியர்கள் கடமைக்கு சமுகமளிக்காமல் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். எனினும் அவசர சிகிச்சைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பல்வைத்திய சேவைக்கு எதிரான சதிகளை முறியடிக்கும் வகையில் குறித்த அடையாள பணிபகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரஞ்சனின் தண்டனை மறுபரிசீலனை செய்யுமாறு கோரிய மனு தள்ளுபடி!

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் வழங்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்யுமாறு ரஞ்சன் ராமநாயக்கவின் சட்டத்தரணி தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வில் குறித்த மனு விசாரணைக்கு வந்தபோதே அதனை நிராகரித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் 4 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்க தற்போது அங்குனுகொலபெலஸ்ஸ சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

# வவுனியா பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டனர் மாணவர்கள்!





வவுனியா மடுக்கந்தை தேசிய பாடசாலைக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களை மீள நியமிக்குமாறு கோரி வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு நேற்று (திங்கட்கிழமை) மாணவர்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அண்மையில் அரசாங்கத்தால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட 6 பேர் மடுக்கந்தை தேசிய பாடசாலைக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

பாடசாலை தவணை விடுமுறையையடுத்து அவர்கள் பிரதேச செயலகத்துக்கு மீள அழைக்கப்பட்டிருந்தனர்.

எனினும் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்ட போதிலும் குறித்த பட்டதாரிகள் ஆசிரியர்களாக கடமையாற்ற பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

இதனால் தமது பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து, பாடசாலை மாணவர்கள் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தை நேற்று முற்றுகையிட்டிருந்தனர்.

ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் கல்விச்செயற்பாடுகள் பின்தங்கி உள்ளன. எனவே ஆசிரியர் வெற்றிடத்தை நிரந்தரமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கையை எடுக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

முற்றுகையிட்ட மாணவர்கள் பிரதேச செயலகத்தின் நிர்வாகக் கட்டடத்துக்குள் சென்றமையால் சற்றுநேரம் அங்கு குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. இதனையடுத்து அங்கு பொலிஸாரும் விரைந்திருந்தனர்.

இந்நிலையில் பிரதேச செயலாளர் குறித்த பாடசாலையின் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் சிலருடன் முன்னெடுத்த பேச்சை அடுத்து மாணவர்களும் ஆசிரியர்களும் அங்கிருந்து சென்றிருந்தனர்.

# கழிவுத் தேயிலை களஞ்சியசாலை அதிரடிப்படையால் சுற்றி வளைப்பு!





பூண்டுலோயா கும்பாலொலுவ பகுதியில் மிகவும் சூட்சுமமான முறையில் இயங்கிவந்த கழிவுத் தேயிலை களஞ்சியசாலை ஒன்றை சுற்றிவளைத்த தலவாக்கலை விசேட அதிரடிப்படையினர், 4 ஆயிரத்து 195 கிலோ கழிவுத் தேயிலையையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கழிவுத் தேயிலையை குறித்த நிலையத்துக்கு கொண்டுவந்து, தூய தேயிலை என்ற போர்வையில் சந்தைக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டுள்ளன என விசேட அதிரடிப்படையினர் தகவல் வெளியிட்டனர்.

அத்துடன், கைப்பற்றப்பட்ட கழிவுத் தேயிலை தூளையும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் சட்ட நடவடிக்கைகளின் நிமித்தம் பூண்டுலோயா பொலிஸாரிடம், விசேட அதிரடிப்படையினர் கையளித்தனர்.




சோதனை மேல் சோதனை போதுமய்யா என ஏங்கும் இதயங்களை தாங்கும் இறை சன்னிதியின் மத்தியில் இறைவார்த்தை சொல்லும் செய்தி.

"பாலை நிலத்தில் அவர் நாற்பது நாள் இருந்தார். எப்போது சாத்தானால் சோதிக்கப்பட்டார். அங்கு காட்டு விலங்குகளிடையே இருந்தார். வானதூதர்கள் அவருக்கு பணி விடை செய்தனர்."

இவை எமக்கு மட்டுமல்ல இறை இயேசுவின் வாழ்விலும் எதிர்கொண்ட சோதனை நிகழ்வுகளாக சவால்களை எதிர்கொண்டு வாழும் வாழ்வை வாழ்ந்து காட்டினார். நாற்பது நாள்கள் தவக்கால உபவாசங்கள், மாமிச தவிர்ப்புகள் முன்னோர் காட்டிய வழியில் இன்றும் தொடரும் வழிபாடுகளும் ஆன்மீக செயல்களும் சோதனைகள் எதிர்கொள்ளும்போது சபலங்கள், சலனங்கள் பல்வேறு வடிவங்களில் எதிர்கொள்வோரும் இறைவார்த்தை தரும் நம்பிக்கை வார்த்தைகள் மனப் பலத்தை தந்துள்ளது.

சாவல்கள் எதிர்கொள்வோரால்தான் சாதனைகள் நிலை நாட்டப்படுகிறது. எந்த சோதனையிலும் துவண்டு விடாது எதிர்கொள்ள கற்றுக் கொள்ளும் பாடங்கள் வாழ்வில் வெற்றிக்கு வழிபிறக்கும் இவை எமது வாழ்வில் பலவற்றை அனுபவித்த அனுபவங்கள், அகிம்சை போராட்டங்கள், அமைதி வாழ்வுக்கு கற்றுத் தந்த பாடங்கள் அனுபவத்தில் பலவாகும். நாற்பது நாள்கள் தவக்கால பயணத்திலும் எமது வாழ்வு புடமிட ஆன்மீக பற்றுதியை பலமாக்க கிடைத்த சந்தர்ப்பமாக ஏற்றுக் கொள்வோம்.

எமது வாழ்வில் ஆன்மீக ஒறுத்தல் காலத்துக்கு ஏற்றதாக உளவு ஒறுப்பு மட்டுமல்லாது எமது செயல்களும் முன்மாதிரியாக தொடர்பூடகங்களான தொலைக்காட்சி பார்த்தல், தொலைபேசி பாவனைகள், வாகன மட்டுப்படுத்தப்பட்ட ஓட்டங்களிலும், தொடர்பாடல் உரையாடல்களிலும் எமது நிலைக்கேற்ப கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் போது எமது மனக்கட்டுப்பாடுகள் மூலமும் எமது செயல்களால் இக்காலத்தில் முன்மாதிரிகையான ஒறுத்தல் தவமுயற்சிகளில் முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை.

முகவாட்டமாக இருந்து எமது தவப்பயணத்தை வெளிப்படுத்தாது தானதர்ம செயல்களால் துன்புறுவோரின் துயர்துடைக்கும் பணிகளிலும் பங்காளராகி பிறர்மகிழ்வில் இறைதரிசனத்தை காணும் மனப்பக்குவத்தை தினம் தினம் புதுப்பிக்க கிடைத்த தவக் காலப் பயணம் மூலம் இறை வார்த்தைகளை வாழ்வாக்க கிடைத்த சந்தர்ப்பமாக்குவோம்.

ஆலய தரிசனங்களுக்கு தடைகள் வரலாம், ஆன்மீக தேடலுக்கு இல்லங்களில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதிலும், சிறுவர், இளையோரின் மன இறுக்கத்தில் இருந்து விடுபட மேற்கொள்ளும் ஆன்மீக ஊக்கப்படுத்தலும் ஆன்மீக தேடலால் புடமிடப்படும் சோதனைகளை வெல்லும் நற்செயல்களாக இல்லங்களை இறைதேடல் மிக்க சூழலை ஏற்படுத்தும் தவப் பயணமாக்குவோம்.

- கலாபூசணம் செ. யோசப்பாலா -

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வீரசேகராவின் வீறாப்பின் பலன்

பலருக்கும் காலம் பிந்திய ஞானம் பிறப்பதுதான் வழமை. இலங்கை அரசியல்வாதிகளும் அதற்கு விதிவிலக்கல்லர்.

'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடுவது போல', 'கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வது மாதிரி' இப்போதெல்லாம் பலருக்கு சுடலை ஞானம்தான் பிறக்கின்றது.

கோட்டாபய அரசில் முக்கிய அமைச்சுப் பதவியை ஏற்றுள்ள சரத் வீரசேகரா குறித்து ஆளும் கட்சிக்குள் சிலருக்கு ஏற்பட்டுள்ள சீற்றம் காலம் பிந்திய தெளிவன்றி வேறில்லை.

சரத் வீரசேகரா போன்றோர் கோட்டா அரசில் உள்ளிருந்து சொல்லும் வியாதி மாதிரியானவர்கள் என்று அந்த அரசின் சில மூத்த அமைச்சர்களுக்கு இப்போதாவது புரிந்திருப்பது அதிசயம் தான்.

ராஜபக்ஷ குழாம் முழுவதுமே பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியில் மூழ்கிக் கிடக்கின்றது என்றும் –

சரத் வீரசேகராக்கள், கமல் குணரட்ணாக்களின் சிங்களத் தீவிர வெறிப் போக்கில்தான் கோட்டா அரசு பயணிக்கின்றது என்றும் –

இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தொப்புள் கொடி உறவுகளான தமிழகத் தமிழர்களின் நிலைப்பாட்டை ஒட்டி இலங்கைத் தமிழர்களுக்காக – அவர்களுக்கான நீதிக்காக – அவர்களின் நியாயமான அபிலாஷைகளுக்காக – குரல் எழுப்ப வேண்டிய கட்டாயத்திலும், இக்கட்டிலும் இருக்கின்றது புதுடில்லி. எனினும் பக்கத்து நாட்டின் நலனுக்கு முன்னுரிமை என்ற தனது அயலுறவுக் கொள்கையை முன்னிறுத்தி கொழும்பையும் சமாளித்துப் போகவே புது டில்லி முயல்கின்றது. அதனால் அது இப்போது ஜெனிவா விவகாரத்தில் கூட மதில்மேல் பூனை நிலைப்பாட்டையே பின்பற்றி நிற்கின்றது. இன்றும் கூட, ஜெனிவா விடயத்தில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரிக்குமா, எதிர்க்குமா, வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் விடுமா என்பது இக்கணம் வரை தெரியாது. அப்படித் தரப்புகளை சமதூரத்தில் வைத்து விளையாடுகின்றது புதுடில்லி.

அதனுடனும் கூட – இந்தியாவுடனும் கூட – தனது அதிகப் பிரசங்கித்தனமான பேச்சு மூலம் – கொழும்பு தொடர்பில் ஓர் எதிர்ப்புணர்வைத் தூண்டி விட்டிருக்கின்றார் சரத் வீரசேகரா என்பது வெளிப்படையானது.

வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா உட்பட பல அமைச்சர்கள், நேரடியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் சென்று இது தொடர்பில் முறைப்பாடு செய்திருக்கின்றார்கள். அமைச்சர் சரத் வீரசேகராவால் நாடு கடுமையான ஆபத்தில் இருப்பதாக அவர்கள் புகார் கூறியுள்ளனர்.

ஜெனிவாவில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான பிரேரணை மீது இன்று வாக்கெடுப்பு நடக்கும் சூழ்நிலை உள்ளது.

அந்த விடயத்தில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கவிருந்த பல நாடுகள், சரத் வீரசேகராவின் பொறுப்பற்ற பேரினவாதப் பேச்சினால் இப்போது மாற்றுத் தரப்புக்கு மாறிவிட்டார்களாம்.

இதனை, ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி சந்திரப்பெருமா அரசுக் தரப்புக்கு அதிகாரபூர்வமாகத் தெரியப்படுத்தியிருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

புர்கா தடை தொடர்பில் இச்சமயத்தில் அமைச்சர் சரத் வீரசேகரா துடுக்குத்தனத்துடன் விடுத்த அறிவிப்பினால் முஸ்லிம் நாடுகளின் ஆதரவை கொழும்பு கணிசமாக இழந்து விட்டது என்றும் கூறப்படுகின்றது.

வெண்ணெய் திரண்டு வருகின்ற சமயம் தாழியை உடைத்த கதை போன்று, கொரோனாவால் மரணமடையும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் முடிவை அறிவித்து, அதனை முன்னெடுத்தமை மூலம், முஸ்லிம் நாடுகளின் ஆதரவை வளைத்துப் பிடித்து ஒழுங்குபடுத்த, மறுபுறத்தில், 'புர்க்கா' தடை என்று முந்திரிக்கொட்டை மாதிரி முந்திக்கொண்டு அறிவித்து விடயத்தைக் குட்டிச் சுவராக்கியிருக்கின்றார் சரத் வீரசேகரா.

இத்தகைய பொறுப்பற்ற பேச்சுகள், நடவடிக்கைகள் மூலம் நாட்டுக்கும் அரசுக்கும் மோசமான நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றார் சரத் வீரசேகரா என்பது தெளிவு.

இப்பத்தியில் ஒரு விடயத்தை ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். நாயின் வேலையை நாய் பார்க்க வேண்டும்; கழுதையின் வேலையை கழுதை பார்க்க வேண்டும். மாறிப் பார்த்தால் குழப்பம் தான்.

இராஜதந்திரிகளின் வேலைகளை இராஜதந்திரிகள் பார்க்க வேண்டும். படைத்தரப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகளை அதற்குரியவர்கள் கவனிக்க வேண்டும். மாறிப் பார்த்தால் யுத்தத்திலும் தோல்வி, இராஜதந்திரத்திலும் தோல்வி என்றாகி விடும்.

அதைப் பட்டறிந்துதான் உணர்ந்து கொள்வது என்று கொழும்பு பிடிவாதம் பிடித்தால் யார் என்ன செய்ய முடியும்? கையைச் சுட்டுக் கொண்டுதான் நெருப்புச் சுடும் என அறிவு பெறும் வேலை இதுதான்...!

# மாகாணசபைத் தேர்தலை நடத்த இரண்டு வாரங்களுக்குள் தீர்வு!

## பிற்போடும் தேவை கிடையாது என்கிறது அரசு



மாகாண சபை தேர்தலை நடத்துவதில் உள்ள சட்ட சிக்கலுக்கு இரண்டு வாரகாலத்தில் தீர்வை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மாகாணசபை தேர்தலை எக்காரணிகளுக்காகவும் பிற்போடும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. எத்தேர்தல் முறைமையின் பிரகாரம் மாகாண சபை தேர்தலை நடத்த முடியும் என உறுதியான தீர்வு கிடைத்தவுடன் தேர்தல் நடத்தப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

மாகாணசபை தேர்தல் முறைமை தொடர்பாக வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பல்வேறு காரணிகளால் மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. தொடர்ந்து மாகாணசபை தேர்தலை பிற்போட இடமளிக்க முடியாது. பழையதேர்தல் முறைமையில் தேர்தலை நடத்துவதா அல்லது புதிய கலப்பு தேர்தல் முறைமையின் பிரகாரம் தேர்தலை நடத்துவதா என்பதில் சட்ட சிக்கல் காணப்படுகிறது. இந்தப் பிரச்சினைக்கு இரண்டு வார காலத்திற்குள் தீர்வைக் காண எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டாம் என ஆளும் தரப்பின் உறுப்பினர்களும், மத தலைவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் எதிர்ப்புக்கான காரணத்தை அவர்கள் தெளிவுப்படுத்தவில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அறிமுகப்படுத்திய மாகாணசபை முறைமை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை. அனைத்து மாகாணங்களிலும் மாகாணசபை முறைமை செயற்படுத்தப்பட்டுள்ளது.

மாகாண சபை முறைமை தொடர்பாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஆராயப்படும். குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்ற காரணத்தால் அரசமைப்பால் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க முடியாது. மாகாண சபைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றுக்குத் தீர்வு காணப்படும்.

மாகாணசபை தேர்தலை பிற்போடும் நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது. மாகாண சபை தேர்தலை அரசாங்கம் பிற்போடுகிறது என்று விமர்சிக்கும் உரிமை எதிர்க்கட்சியினருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் கிடையாது. நல்லாட்சி அரசாங்கம் 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்ற தேர்தலில் அடைந்த தோல்வியின் காரணமாக மாகாணசபை தேர்தலை திட்டமிட்டு பிற்போட்டது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவு வழங்கியது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்படவில்லை. கட்சி ரீதியிலான முரண்பாட்டை அரசியல்வாதிகள் மாகாணசபை முறைமை ஊடாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் பலவீனமடைந்தன. இவ்விரு மாகாண சபைகளின் பலவீனத்தால் முழு மாகாண சபை முறைமையையும் பலவீனம் எனக் கருத முடியாது. ஆகவே, மாகாண சபை தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்படும். - என்றார்.

# ஊடக ஜனநாயகத்தைப் பாதுகாக்க மக்கள் சக்தி முன்னின்று செயற்படும்!

கொழும்பு, மார்ச் 23

ஊடகங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். ஊடகங்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்னின்று செயற்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம்ஞாயிறுக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

ஊடகங்கள் தொடர்பில் தெரிவித்த கருத்துக்களின் மூலம் ஜனாதிபதியால் யாருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்துக்கு முன்னர் அரசாங்கத்துக்கு எதிராகக் கருத்துக்களைத் தெரிவித்த ஊடகவியலாளர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

எவ்வாறிருப்பினும் ஊடகங்கள் தொடர்பில் இது போன்று முன்வைக்கப்படுகின்ற கருத்துக்களை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். ஊடகங்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்னின்று செயற்படும்.

இது இவ்வாறிருக்க நாட்டில் நெல் மற்றும் எரிவாயு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. எனினும் அரசாங்கம் இதனை மறைக்கின்றது. எனவே மக்களிடம் உண்மைகளை மறைக்காமல் அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் பாரிய சுற்றாடல் சீரழிவு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் பல பௌத்த மதத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களுடன் ஒப்பிடும் போது தற்போதைய அரசாங்கத்திலேயே பாரியளவில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

தற்போது சுற்றாடலை பாதிப்படையச் செய்து ஹோட்டல்களை நியமிப்பதற்கு அனுமதிப்பத்திரமளிக்கப்பட்டுள்ளது. முத்துராஜவல உள்ளிட்ட முக்கிய வனப்பகுதிகள் தற்போதைய அரசாங்கம் ஆட்சி பொறுப்பேற்றதன் பின்னரே பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்துள்ளன. நாம் கூறுவது பொய்யெனில் அதனை எவருக்கேனும் உறுதிப்படுத்துமாறும் சவால் விடுக்கின்றோம் - என்றார்.

# ஊடகவியலாளர் அச்சுறுத்தப்பட்ட விவகாரம்: ராஜித, சத்துர குற்றத்தடுப்பு பிரிவில் முன்னிலை!

கொழும்பு, மார்ச் 23

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன மற்றும் நாடாளுமன்ற உறுப்பி னர் சத்துர சேனாரத்ன ஆகி யோர் வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் முன்னிலையாகினர்.

நேற்று (திங்கட்கிழமை) முற்பகல் முன்னிலையாகிய அவர்களிடம் தொடர்ந்து விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

ஊடகவியலாளர் சுஜீவ கமகே, (வயது 62) குழுவொன்றால் கடத்தப்பட்டு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கிய சம்பவம் தொடர்பில் இருவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே ராஜித சேனாரத்ன மற்றும் சத்துர சேனாரத்ன ஆகியோரிடம் வாக்குமூலம் பெறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் சூழ்ச்சியால் ஆட்சிமாற்றம் இனி ஒருபோதும் ஏற்படுத்தப்படமாட்டாது!

## விமல் வீரவன்ஸ ஆக்ரோஷம்



வில்பத்து காடழிப்புக்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் இன்று சூழலியலாளர்களாக இயற்கையைப் பாதுகாப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்ட அரசாங்கத்துக்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள். 2014 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த குறிப்பிடப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுக்களும் தற்போது இரண்டாம் பாகமாக தோற்றம் பெற்றுள்ளது. அரசியல் சூழ்ச்சியால் ஆட்சி மாற்றத்தை இனியொருபோதும் ஏற்படுத்த முடியாது என கைத்தொழில் வளங்கள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அத்துருகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசாங்கம் தோற்றம் பெற்றுள்ளது. கொவிட் - 19 வைரஸ் தாக்கம் குறுகிய காலத்தில் பாரிய சவால்களை ஏற்படுத்தியுள்ளது. சிறந்த திட்டமிடலின் ஊடாக அனைத்து சவால்களும் வெற்றி கொள்ளப்பட்டு நாடு தற்போது வழமை நிலைக்குத் திரும்பியுள்ளது.

அரசியல் மற்றும் சமூக களத்தில் காடழிப்பு விவகாரம் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. வெளிநாடுகளில் அழிக்கப்பட்டுள்ள காடுகளின் புகைப்படங்களை கொண்டு தற்போது போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

வில்பத்து காடு அரசியல்வாதிகளால் திட்டமிட்டு அழிக்கப்படும் போது அதற்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் இன்று இயற்கையை பாதுகாக்கும் சூழலியலாளர்களாக அரசாங்கத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார்கள்.

வனப்பகுதிகளை அண்மித்த பகுதிகளில் அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கும் போது அதனையும் சுற்றுச்சூழல் அழிப்பு செயற்பாடு என போர்க்கொடி தூக்குகிறார்கள். ஜனாதிபதியின் கிராமத்துடனான உரையாடல் செயற்திட்டத்தை பலவீனப்படுத்தும் வகையில் திட்டமிட்ட வகையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த எதிர்த்தரப்பினர் அப்போதைய அரசாங்கத்துக்கு எதிராக இவ்வாறான பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்கள். போலியான குற்றச்சாட்டுக்கள் அப்போது வெற்றியீட்டின. அவ்வெற்றியும் நெடுநாள் நீடிக்கவில்லை. போலியான குற்றச்சாட்டுக்களால் இனி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

இயற்கை வளங்கள் ஏதும் அழிக்கப்படவில்லை. சுபீட்சமான இலக்கு கொள்கைத் திட்டத்தில் இயற்கையைப் பாதுகாக்க குறிப்பிடப்பட்ட விடயங்கள் பல தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளன. நாட்டு மக்களுக்கான அபிவிருத்தி பணிகளையும் எதிர் தரப்பினர் அரசியல் இலாபத்துக்கு பயன்படுத்திக் கொள்வது கவலைக்குரியது. - என்றார்.

# நீரில் மூழ்கி இருவர் சாவு மாவனெல்லவில் சம்பவம்!

**மாவனெல்லை, போவெல்ல பகுதியில் நீராடச் சென்ற 7 பேரில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.**

**கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

**7 பேர் அடங்கிய குழுவொன்று மாவனெல்லை, போவெல்ல பகுதியிலுள்ள மாஓயாவில் நீராடச் சென்றுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.**

**இதன்போது 7 பேரில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். 24 வயதுடைய இரண்டு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.**

**உயிரிழந்த இளைஞர்கள் இருவரினதும் சடலங்கள் மாவனெல்லை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் மாவனெல்லை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.**

# இலங்கைக் கடற்படையின் பிரதானியாக ரியர் அட்மிரல் ருவான் பெரேரா நியமனம்





இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தலைவரும், ஆயுதப்படைகளின் தலைவருமான கோட்டாபய ராஜபக்ஷ, ரியர் அட்மிரல் ருவன் பெரேராவை இலங்கை கடற்படையின் பிரதானியாக நியமித்துள்ளார்.

2021 மார்ச் 21 முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, கடற்படைத் தலைமையகத்தில் வைத்து ரியர் அட்மிரல் ருவான் பெரேராவுக்கு நியமனக் கடிதத்தை முறையாக வழங்கினார்.

36 ஆண்டுகளுக்கும் மேலான தனது புகழ்பெற்ற கடற்படை சேவையிலிருந்து ரியர் அட்மிரல் சுமித் வீரசிங்க கடந்த ஞாயிற்றுக் கிழமை ஓய்வு பெற்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது 55 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் ஓய்வுபெற்ற மூத்த அதிகாரிக்கு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன உட்பட பணிப்பாளர் நாயகர்கள் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். அதன்பிறகு, அவருக்காக கடற்படைச் சம்பிரதாய முறைப்படி மரியாதை வழங்கப்பட்டதுடன் கடற்படை பாரம்பரியத்தின் படி சாலையின் இருபுறமும் உள்ள மூத்த மற்றும் இளைய கடற்படை வீரர்கள் அவருக்கு பிரியாவிடை செலுத்தினர். இந்த நிலையிலேயே ரியர் அட்மிரல் ருவன் பெரேரா குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

# தொலைபேசி விற்பனை நிலையத்தில் திருட்டு

அம்பாறை, மார்ச்,23

தனியார் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்று திருடர்களால் உடைக்கப்பட்டு மீள்நிரப்பு அட்டைகள், கைத்தொலைபேசிகள், பணம் என்பன களவாடப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மருதமுனை பிரதான வீதியில் உள்ள தனியார் தொலைபேசி விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் அதிகாலை இத்திருட்டு முயற்சி சம்பவம் பதிவாகியுள்ளது.

இம்முயற்சியில் இரு திருடர்கள் ஈடுபட்டுள்ளதுடன் தனியார் தொலைபேசி விற்பனை நிலையத்தினை முழுமையாக உடைத்து திருடிச் சென்றுள்ளதுடன் ஏனைய கடைகள் உடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் பலனளிக்காமையினால் அவர்கள் கொண்டு சென்ற இரும்பு வெட்டும் உபகரணத்தை கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இவ்வாறு திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் துவிச்சக்கரவண்டி ஒன்றில் வருகை தருவதும் தங்கள் அடையாளம் தெரியாத படி உரப்பையினால் முகங்களை மூடி இச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதை அருகே உள்ள வர்த்தக நிலைய சி.சி.டி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.

இப்பகுதியில் கடும் மழை பெய்த நிலையில் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் சம்பவ இடத்திற்கு தடயவியல் நிபுணர்கள், கல்முனை பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதை காண முடிந்தது.

குறித்த தனியார் கைத்தொலைபேசி விற்பனை நிலையத்தில் 30 கைத்தொலைபேசிகள், 55 ஆயிரம் ரூபா பணம், பல்வேறு தொலைபேசி, மீள் நிரப்பு அட்டைகள் என்பன திருடர்களால் எடுத்து செல்லப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட வர்த்தகர் தெரிவித்தார்.

மேலும் மேற்குறித்த சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போலி முகப்புத்தகக் கணக்கு தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு!

'ஜே.வி.பி. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்' என்ற பெயரில் போலியான முகப்புத்தக கணக்கு உருவாக்கப்பட்டு அதன் ஊடாக போலிச் செய்திகள் பரப்பப்படுகின்றன எனத் தெரிவித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் சட்டத்தரணி சுனில் வடகல ஆகியோரால் குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த சனிக்கிழமை பங்குபற்றி கிராமத்துடன் கலந்துரையாடல் செயற்திட்டத்தின் போது 'ஜே.வி.பி. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்' என்ற முகப்புத்தக கணக்கில் சுற்றுச்சூழல் அழிப்பு தொடர்பாக போலியான செய்திகள் வெளியிடப்படுகின்றன எனத் தெரிவித்து, ஜே.வி.பி. தொடர்பில் கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

குறித்த முகப்புத்தகக் கணக்கு தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடளித்ததன் பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நுவரெலியாவில் கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் தெரிவித்த கருத்து தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடளித்துள்ளோம்.

இதன் போது 'ஜே.வி.பி. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்' என்ற முகப்புத்தக கணக்கின் ஊடாக போலியான செய்திகள் பரப்பப்படுகின்றன என்று ஜனாதிபதி தெரிவித்தார். எனினும் இந்த முகப்புத்தக கணக்கிற்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

இந்த கருத்தினை கோட்டாபய ராஜபக்ஷ என்ற தனியொரு நபர் தெரிவித்திருந்தால் நாம் முறைப்பாடளித்திருக்க மாட்டோம். எனினும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி நாட்டு மக்கள் மத்தியில் ஊடகங்கள் மத்தியில் இவ்வாறான கருத்தை தெரிவித்தமையால் நாம் முறைப்பாடளித்துள்ளோம்.

இந்த முகப்புத்தக கணக்கு கடந்த 6 தினங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 'ஜே.வி.பி. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்' என்று இந்த கணக்கு ஆரம்பிக்கப்பட்டிருந்ததால், ஜே.வி.பி. ஊடகப்பிரிவு இது தொடர்பில் பேஸ்புக் நிறுவனத்துக்கு கடந்த 18 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது. அதனையடுத்து 19 ஆம் திகதி இந்த கணக்கு பேஸ்புக் நிறுவனத்தால் முடக்கப்பட்டது.

இவ்வாறு போலி கணக்கு என உறுதிப்படுத்தப்பட்டு பேஸ்புக் நிறுவனத்தால் முடக்கப்பட்ட கணக்கில் இடப்பட்ட பதிவுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு காண்பித்து ஜே.வி.பி. போலி செய்திகளை பரப்புவதாகக் கூறியுள்ளார்.

இது தொடர்பான உண்மை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். காரணம் இந்த கணக்கு நிதிவழங்கி உருவாக்கப்பட்டிருப்பதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே இது தொடர்பில் துரித விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறின்றி எம்மால் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளைப் போல இந்த முறைப்பாடும் புறந்தள்ளப்படுமாயின் இது ஜனாதிபதி மற்றும் அவரின் ஊடகப்பிரிவிற்கு தெரிந்தே முன்னெடுக்கப்பட்ட செயற்பாடு என்ற முடிவிற்கு வர வேண்டியேற்படும்.

காலைக்கதிர் Kalaikkathir

# சஹ்ரானின் அடிப்படைவாதத்துக்கு ஜே.வி.பி. ஈர்க்கப்பட்டு விட்டதா?

## சரத் வீரசேகர கேள்வி



தற்கொலை குண்டுதாரி சஹ்ரானின் அடிப்படைவாத கொள்கைக்கு மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு சில உறுப்பினர்கள் ஈர்க்கப்பட்டுள்ளார்களா என்ற சந்தேகம் காணப்படுகிறது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மாளிகாகந்த விகாரையில் இடம்பெற்ற மத வழிபாட்டில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலின் தற்கொலை குண்டுதாரிகளின் தந்தையான இப்ராஹிம் மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினராகச் செயற்பட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளில் வாக்குமூலம் வழங்க நேரிடும் என்பதில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அச்சம் கொண்டுள்ளார்.

முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் இப்ராஹிம் என்பவர் மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியல்உறுப்பினராகசெயற்பட்டமைஉறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்கொலை குண்டுதாரி சஹ்ரானின் கொள்கைக்கு மக்கள் விடுதலை முன்னணியின் ஒரு சில உறுப்பினர்கள் ஈர்க்கப்பட்டுள்ளன எனவும் சந்தேகம் காணப்படுகிறது.

சிலைகளை வழிபடுபவர்கள் கோத்திரர்கள் என மக்கள் விடுலை முன்னணியின் உறுப்பினர் பிமல் ரத்நாயக்க அண்மையில் குறிப்பிட்டுள்ளார். சிலைகளை வழிபடுபவர்களுக்கு எதிராக செயற்பட்ட சஹ்ரான் போன்ற அடிப்படைவாதிகளின் கொள்கைக்கு ஈர்க்கப்பட்டவர்கள் சிலை வழிபாடுகளுக்கு எதிராக கருத்துரைப்பவர்களாக கருதப்படுவார்கள்.

3 சதவீத மக்களாணையினை பெற்றுள்ள மக்கள் விடுதலை முன்னணிக்கு இனி மக்களின் ஆதரவு ஒரு போதும் கிடைக்கப் பெறாது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் யோசனைகளை துரிதகரமாக செயற்படுத்த உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. - என்றார்.

# நாடு திரும்பியவர்களில் 12 பேருக்குத் தொற்று!

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் அடையாளம் காணப்பட்ட 354 கொரோனா நோயாளர்களில் 12 பேர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் என கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் கம்பஹா மாவட்டத்திலேயே கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிக கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் கம்பஹாவில் 197 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 58 பேரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த 17 பேரும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 70 பேரும் கொரோனா நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து இலங்கையில் இது வரையில், 90 ஆயிரத்து 200 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் உத்தியோகத்தரை கத்தியால் குத்தியவர் கைது!

கொழும்பு, கிருலப்பனை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கத்தியால் குத்தி காயப்படுத்தி தப்பிச் சென்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கிருலப்பனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

கிருலப்பனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகஸ்வத்த பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை போதைப்பொருள் விவகாரம் தொடர்பில், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவரை கைது செய்வதற்காக, கிருலப்பனை பொலிஸ் நிலையத்தின் உத்தியோகத்தர்கள் இருவர் சென்றிருந்தனர்.

இதன்போது சந்தேக நபரை அடையாளம் கண்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் , அவரை கைது செய்து அழைத்து வரும் நோக்கில், அவரது கைகளில் விலங்கிட முயற்சித்துள்ளனர். பின்னர், சந்தேக நபர் பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவரை கத்தியால் குத்தி காயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து காயமடைந்த, பொலிஸ் உத்தியோகத்தர் கலுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். அவரது மார்பகம் மற்றும் கைப்பகுதிகளில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில் தப்பிச் சென்ற சந்தேக நபர், நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடொன்றில் மறைந்திருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிருலப்பனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சர்வதேச கிரிக்கெட் நிர்வாக தரப்படுத்தலில் இலங்கை 10ஆவது இடத்துக்கு பின்நகர்வு!

## திஸ்ஸ அத்தநாயக்க தகவல்

கொழும்பு, மார்ச் 23

சர்வதேச கிரிக்கெட் நிர்வாக தரப்படுத்தலில் இலங்கை 10 ஆவது இடத்திற்கு பின்நோக்கிச் சென்றுள்ளது. கிரிக்கெட் நிர்வாகம் மற்றும் கிரிக்கட் கட்டுப்பாட்டு சபை போன்றவற்றால் இலங்கையில் கிரிக்கெட் துறையை மேம்படுத்த முறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாமையே இதற்கு காரணமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

பல மாதங்கள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவில்லை. எனினும் தற்போது மீண்டும் அவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள தரப்படுத்தலில் இலங்கை பத்தாவது இடத்துக்கு பின்நோக்கிச் சென்றுள்ளது.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை கைப்பற்றியதன் பின்னர் சர்வதேகிரிக்கெட்சபைதரப்படுத்தலில் இலங்கை முதல் 8 இடங்களுக்குள் இடம்பிடிக்கும்.

எனினும் இம்முறை 10 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கின்றோம். ஆப்கானிஸ்தான் கூட இலங்கைக்கு முன்னதான இடத்தில் காணப்படுகிறது. இவ்வாறு இலங்கை பின்வாங்கியுள்ளமையால் உலகக் கிண்ண தொடரில் போட்டியிடுவதற்கு முதலாவது சுற்றிலேயே தெரிவாக முடியாத நிலை ஏற்படும். இதன் மூலம் உலகக் கிண்ணத் தொடர்பில் இலங்கைக்கு வாய்ப்புக்கள் கிடைக்காமல் போகக் கூடிய நிலைமை காணப்படுகிறது என்றும் அவர் கூறினார்.



# காடழிப்பை ஆதாரத்துடன் எம்மால் நிரூபிக்க முடியும்!

## எதிர்க்கட்சி சவால்



நாட்டில் எவ்வித வன அழிப்புக்களும் இடம்பெறவில்லை என அரசாங்கம் கூறுகின்ற போதிலும், எந்தெந்த பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்படுகின்றன என்பதை ஆதாரங்களுடன் எம்மால் நிரூபிக்க முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதன் மூலமும் எதிர்க்கட்சி மீது குற்றஞ்சுமத்துவதன் மூலமும் உண்மைகளை மறைக்க முடியாது என்பதை அரசாங்கத்துக்கு நினைவுபடுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

சுற்றாடல் பாதுகாப்பு , பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு புதிய தொரு மாற்றத்தை எதிர்பார்த்து தான் 69 லட்சம் மக்கள் அரசியலில் ஈடுபடாத தலைவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர். ஆனால் அந்த மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு முரணாக சுற்றாடல் அழிப்பு தொடர்பான விழிப்புணர்வு சித்திரங்களைக் கூட காட்சிப்படுத்த முடியாத நிலைமை இளம் சந்ததியினருக்கு ஏற்பட்டுள்ளது.

இவை தொடர்பில் மக்களுக்குத் தெரியப்படுத்தும் ஊடகங்கள் நேரடியாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன. பொலிஸாரும் நேரடியாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும் நிலை ஏற்பட்டுள்ளது. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் முதன் முறையாக ‘எமது அரசாங்கம்’ என்று கருத்துக்களை தெரிவித்துள்ளார். உயர் பதவிகளிலுள்ள அதிகாரிகள் இவ்வாறு செயற்படும் போது கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகளிடம் எவ்வாறு ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியும்?

20 ஆவது அரசமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இவ்வாறு தான் ஏகாதிபத்திய ஆட்சி முன்னெடுக்கப்படும் என்பதை நாம் முன்னரே கூறியிருந்தோம். இவ்வாறான ஆட்சியில் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என் றும் நாமே கூறினோம். ஒருபுறம் இனவாதமும் அடிப்படைவாதமும் தூண்டி விடப்பட்டது. மறுபுறம் பொய் கூறி மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

ஊடகங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்கள் பல விட யங்களை நினைவுபடுத்துகின்றன. சில ஊடகங்கள் அரசாங்கத்துக்குச் சார்பான கருத்துக்களை வெளியிடும் போது அவை போற்றப்பட்டன. எனினும் தற்போது மரங்கள் வெட்டப்படுகின்றமையைக் காண்பிக்கும் போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் பல குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

அவரது உத்தியோகபூர்வ முகப்புத்தக பக்கத்தை ஊடுருவிய மாணவனை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து அன்பளிப்புக்களை வழங்கினார். எனினும் தற்போது சுற்றாடல் சீரழிவு தொடர்பில் உண்மைகளைக் கூறிய யுவதி சமூக வலைத்தளங்களில் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார். பிரதான ஊடகங்களை விட சமூக ஊடகங்களும்உண்மைகளைவெளிப்படுத்த ஆரம்பித்துள்ளன. இதன் காரணமாகவே தற்போது ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. – என்றார்.



- சந்துரு -

கழிவு சுத்திகரிப்புக் களம்

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுத்திகரிப்புப் பணியில் அசமந்தம்

உடுவில் பிரதேசத்தில் மனிதக் கழிவுகள், உணவகக் கழிவுகள் மற்றும் வாகன சுத்திகரிப்பு நிலையக் கழிவுகள் போன்றவற்றை அகற்ற உரிய வசதிகள் இருந்தும் அவை முறையாக பயன்படுத்தப்படுவதில்லை என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ் மாவட்ட அரச அதிபராக வேதநாயகன் இருந்த பொழுது யாழ் கச்சேரியினூடாக கழிவு சுத்திகரிப்பு பரிகரிப்பு இயந்திரம் உடுவில் பிரதேசபைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.





மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான இந்த இயந்திரப்பொறிமுறை வழங்கப்பட்டு ஆறு வருடங்களாகிவிட்டன. வழங்கப்பட்டதில் இருந்து அது முழுமையாக நிர்மாணிக்கப்பட்டு, செயற்படுத்தப்படவில்லை என அறியமுடிகிறது.

இந்த பரிகரிப்பு இயந்திரம் மூலம் நாளொன்றுக்கு 50ஆயிரம் லீற்றர்கள் வரை கழிவை சுத்திகரிக்க முடியும். அதன் வெளியீடான நீரையும் மற்றும் திண்மக்கழிவினை எருவாக மாற்றியும் விவசாயத் தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும்.

அது மட்டுமன்றி, இதன் மூலம் தொழில்நுட்ப அலுவலர்கள் உள்ளடங்கலாக பதினைந்துக்கும் அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி இருக்க முடியும்.





சுன்னாக மீன் சந்தை நீர்க் கழிவுகள் மாலை வேளைகளில் கழிவுவாய்க்கால் வழியாக திறந்துவிடப்படுகிறது. அது தேங்கி நின்று, துர்நாற்றம் வீசி, மக்களை முகம்சுழிக்க வைக்கிறது.

சுத்திகரிப்பு பொறிமுறை இருக்க அதனை பயன்படுத்தாதன் விளைவே இது!

உடுவில் பிரதேசபையின் செயற்பாடுகள் குறித்துப் பலர் விசனம் தெரிவிக்கின்றனர்.

சபையின் ஜே.ஸி.பி., ரோலர், கழிவகற்றல் வாகனங்கள் முன்னர் வாடகை அடிப்படையில் பொதுமக்கள் சேவைக்கு வழங்கப்பட்டு வந்தன. இப்போது கனரக சாரதி இல்லை எனத் தெரிவித்து அவை தற்பொழுது வழங்கப்படுவதில்லை.

கொத்தியாலடி சுடலையை அண்டியிருக்கும் எருமீள் சுழற்ச்சி இயந்திரங்களும் உரிய பராமரிப்புடன் இல்லை.

நீர் வழங்கல் சபையின் உரிய அனுமதி இன்றி சுத்திகரிக்கப்பட்ட நீர் விற்பனை நிலையத்திற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

மருதனார்மட சந்தை வளாகத்தில் விவசாயிகளுக்கான இட ஒதுக்கீட்டின்போது முரண்பாடுகள் நிலவியமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆட்சி மாற்றத்தால் பேராபத்தில் நாடு!

## சந்திரிகா கடும் சீற்றம்

கொழும்பு, மார்ச் 23

சர்வதேச மட்டத்தில் இலங்கை இன்று பேராபத்தை எதிர்கொண்டுள்ளது. இதற்கு இங்கு ஏற்பட்ட ஆட்சி மாற்றமே பிரதான காரணமாகும்.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நல்லாட்சி அரசு நூறு வீதம் திறன் என்று சொல்ல வரவில்லை. ஆனால், அந்த ஆட்சியில் சர்வதேசத் தலையீடுகள் இருக்கவில்லை. சர்வதேசத்துடன் இணைந்து நாடு பயணித்தது.

ஆனால், இந்த ஆட்சியில் சர்வதேசத் தலையீடுகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. ராஜபக்ஷ அரசின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளே இதற்குக் காரணமாகும்.

நாட்டிலுள்ள மூவின மக்களையும் அரவணைத்துக்கொண்டு பயணிக்க வேண்டிய அரசு, தமிழ், முஸ்லிம் மக்களை வேண்டுமென்றே புறந்தள்ளி வைத்துள்ளது அவர்களின் மத, கலாசார உரிமைகளில் கைவைத்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள்தான் இலங்கை மீதான சர்வதேசத்தின் தலையீடுகளை அதிகரிக்கச் செய்துள்ளன - என்றார்.

# பசறை கோர விபத்து தொடர்பில் பஸ், டிப்பர் சாரதிகளுக்கு மறியல்

லுணுகலை - பசறை வீதியின் 13 ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்து தொடர்பில் கைதுசெய்யப்பட்டிருந்த பஸ்ஸின் சாரதியும், டிப்பர் ரக வாகனத்தின் சாரதியும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று பதுளை பதில் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான பஸ்ஸை வழமையாக செலுத்தும் சாரதி நேற்றுமுன்தினம் பஸ்ஸை செலுத்தியிருக்கவில்லை எனவும், அவருக்குப் பதிலாக மற்றுமொருவரே பஸ்ஸை செலுத்தினார் எனவும் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்திருந்தார்.

பஸ்ஸின் சாரதி தற்போது பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், விபத்தின் பின்னர் தப்பிச் சென்றிருந்த டிப்பர் ரக வாகனத்தின் சாரதி நேற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டிப்பரில் 220 கிலோ கஞ்சா ஆழியவளையில் பிடிபட்டது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.23

வடமராட்சி கிழக்கு ஆழியவளைப் பகுதியில் நேற்று அதிகாலை டிப்பரில் கடத்திச் செல்லப்பட்ட 220 கிலோ கிராம் கேரளக் கஞ்சா கடற்படையினரால் கைப் பற்றப்பட்டுள்ளது.

ஆழியவளையில் இருந்து கிளிநொச்சி நோக்கி நேற்று அதிகாலை 3 மணியளவில் பயணித்த மணல் ஏற்றப் பயன்படும் டிப்பரில் கஞ்சா கடத்தப்படுவதாக கடற்படையினருக்கு கிட்டிய இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் கடற்படையினர் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்

இதன்போது கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான டிப்பரில் சிறு பொதிகளாகக் கட்டப்பட்டு பின்னர் பொலித்தீன் கவர்களால் நீர் உட்புகாத வண்ணம் பாதுகாக்கப்பட்டு கடத்தி வரப்பட்ட 220 கிலோ கேரளாக் கஞ்சாவே கடற்படையினரால் டிப்பரில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

அதில் இருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். டிப்பரும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணம் - வண்ணை , மணிக்கூட்டு வீதி

# அருள்மிகு ஸ்ரீ அரசடி விநாயகர் தேவஸ்தானம்

அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் வாழ்வை மேம்படுத்தவும்
எதிர்கால சுபிட்ஷசகரமான வாழ்வுக்காகவும் நடாத்தப்படும்

# மஹா கணபதி ஹோம பெருவிழா

**23.03.2021 செவ்வாய்க்கிழமை** சார்வாரி வருடம் – 2021 ஆம் ஆண்டு

**விநாயகப் பெருமான் அடியார்களே!**

எக்காரியங்களிலும் முன்நின்று வினைநீக்கி, அருள்பவரும், தன்னை நாடிவரும் பக்தர்களின் இடர்களைந்து இன்பம் நல்கி என்றும் வற்றாத செல்வத்தையும், வளமான வாழ்வையும் வழங்கும் வள்ளலாகிய அருள்மிகு ஸ்ரீ அரசடி விநாயகப் பெருமானின் அனுக்கிரகம் வேண்டி பெருவிழா நிகழும் மங்கலகரமான சார்வரி வருடம் பங்குனித் திங்கள் 10ஆம் நாள் (23.03.2021) செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு மஹா கணபதி ஹோமம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. அடியார்கள் இப் பெருவிழா நாள்களில் விரதமிருந்து விநாயகப் பெருமானை வழிபட்டுச் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**பங்குனித் திங்கள் 10ஆம் நாள் :**

23.03.2021 செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணி : மஹா கணபதி பூஜை
புண்ணியாவாகனம்
பஞ்சகவ்ய பூஜை
**மகா கணபதி ஹோமம்**
பூர்ணாகுதி
அபிஷேகம், விசேட பூஜை



**மாலை 5.30 மணிக்கு : விசேட பூஜை,**
**வசந்தமண்டப பூஜை உற்சவம்**

மேற்படி கணபதி ஹோமத்தில் சகல பக்தர்களும் கலந்துகொண்டு நாட்டில் உள்ள சகல வியாதிகளும் நீங்கி பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக!

**குறிப்பு : நிகழ்வுகள் சுகாதார நடைமுறைக்கு அமைவாக நடைபெறும்.**

**மணிக்கூட்டு வீதி,**
**வண்ணை, யாழ்ப்பாணம்**

**விநாயகர் பணியில்**
**பரிபாலன சபை**

# சுற்றுச்சூழலுக்கு எதிரான செயற்பாடு எதையும் அரசு முன்னெடுக்கவில்லை!

## ரத்னாயக்க தெரிவிப்பு



எதிர்க்கட்சியினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசாங்கத்தை பலவீனப்படுத்த முயற்சிக்கிறார்கள். சுற்றுச்சூழலுக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் போது இயற்கை வளங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. காடழிப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் முறையான விசாரணைக்குட்படுத்தப்படும் என வன மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

காடழிப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக வினவிய போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அரச அதிகாரத்துடன் வனப்பகுதிகள் அழிக்கப்படுகின்றன என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்த்தரப்பினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். இவ்வாறான குற்றச்சாட்டுக்களால் அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியாது.

வனப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் போது இயற்கை வளங்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. அபிவிருத்தி பணிகளின் போது இயற்கை வளங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்திட்டங்களை முன்னெடுக்க உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சுபீட்சமான எதிர்காலக் கொள்கை திட்டத்தில் இயற்கை வளங்களைப் பாதுகாக்க பல செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. வனப்பகுதிகளை 30 வீதத்தால் அதிகரிக்க நாடு தழுவிய ரீதியில் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பல வனப்பகுதிகள் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டு அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே சுற்றுசூழலுக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை.

காடழிப்பு குறித்து பல குற்றச்சாட்டுக்கள் இதுவரையில் முன்வைக்கப்பட்டுள்ளன அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்து வனஜீவராசிகள் அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளன அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். - என்றார்.

# எம்.சி.சி. உடன்படிக்கையில் அரசு கைச்சாத்திடமாட்டாது!

## சட்டமா அதிபர் திட்டவட்டம்

அமெரிக்காவுடனான எம்.சி.சி. உடன்படிக்கையில் அரசாங்கம் கைச்சாத்திடப் போவதில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பை சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா, உயர் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு வைத்தியசாலையில் தாதியர்கள் அடைத்துவைப்பு!

## பரபரப்பை ஏற்படுத்திய ஊழியர்கள்

மஹரகம கண் வைத்தியசாலையில் தாதிகள் இருவரை அறை ஒன்றுக்குள் வைத்து பூட்டிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த வைத்தியசாலையில் ஊழியர்கள் இருவர் இந்த தாதிகள் இருவரையும் சுமார் ஒரு மணித்தியாலம் அறையினுள் வைத்து பூட்டி வைத்துள்ளனர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த தாதிகள் சிறைப்படுத்தப்பட்டதற்கான காரணம் இதுவரையில் தெரியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றைய ஊழியரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# அரசியல் நோக்கங்களுக்காகவே துமிந்தவுக்கு மரணதண்டனை!

## இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவிப்பு



அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நல்லாட்சியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்கள் அனைவருக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்- முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டமை தொடர்பாக பாரிய சந்தேகம் காணப்படுகின்றது.

தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னரே அத்தீர்ப்பு தொடர்பில் அரசியல்வாதிகள் கலந்துரையாடியுள்ளமை தெரியவந்துள்ளது என்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு, ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டுமென ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதியிடம் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசியல் காரணிகளையும் தனிப்பட்ட பழிவாங்கல்களையும் அடிப்படையாகக் கொண்டே மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்ற சந்தேகம் காணப்படுகிறது.

இந்நிலையில், துமிந்த சில்வாவுக்கான தீர்ப்பை மீள்பரிசீலனை செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளோம். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பேஸ்புக் விருந்து சுற்றிவளைப்பு பெண்கள் உட்பட 34 பேர் கைது!

கொழும்பின் புறநகர் பிலியந்தலை, மடபாத பிரதேசத்தில் பேஸ்புக் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட பேஸ்புக் விருந்து சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நடத்தப்பட்ட இந்த பேஸ்புக் விருந்து சுற்றிவளைக்கப்பட்டு இளைஞர், யுவதிகள் உட்பட 34 பேர் பிலியந்தலை பொலிஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.


மேல் மாகாண புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்குகிடைத்த முறைப்பாட்டிற்கமைய பிலியந்தலை விடுதி ஒன்று சுற்றிவளைத்து சோதனைக்குட்படுத்தப்பட்ட போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை சோதனைக்குட்படுத்தும் போது 16 பேரிடம் கஞ்சா பக்கெட்களும், 12 ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஆபத்தான போதைப்பொருள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இளைஞர், யுவதிகள் குறித்த போதைப் பொருள்களை அருந்தியுள்ளார்களா என சோதனையிட களுபோவில வைத்தியசாலையில் சேர்க்க பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விருந்து பேஸ்புக் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் 9 பெண்கள் உள்ளடங்குகின்றனர். அத்துடன் அவர்களுக்குள் விடுதி உரிமையாளரானபெண்ணும்உள்ளடங்குகிறார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# போலி நாணயத் தாள்களுடன் நபரொருவர் வசமாய் மாட்டினார்!



மட்டக்களப்பு - ஓட்டமாவடியிலுள்ள சப்பாத்துக்கடை ஒன்றில் 20 போலி 5 ஆயிரம் ரூபா நாணயத் தாள்களை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்தநபர்கடந்தஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளமையுடன், இதன்போது விசேட அதிரடிப்படையினரால் நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த விசேட தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான போலி நாணயத் தாள்களே மீட்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவரை வாழைச்சேனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## உலக வானிலை நாள்
## World Meteorological Day

இந்நாள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 23 இல், கடைபிடிக்கப்பட்டு வருகிறது. 1950ஆம் ஆண்டு முதல் உலகம் முழுவதிலும் கொண்டாடப்பட்டு வரும் இந் நாள். ஜெனிவாவில் அமைந்துள்ள உலக வானிலை அமைப்பு தலைமையகத்தால் பிரகடனம் செய்யப்பட்டதாகும்



ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

## எழுச்சிப் பேரணிக்கு எதிரான வழக்கு:

# அரச தரப்பு ஆட்சேபனை மீது மே 3 இல் நீதிமன்றின் முடிவு!



பருத்தித்துறை, மார்.22

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப் பேரணி தொடர்பாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆரம்பித்துள்ள சட்ட நடவடிக்கை தொடர்பில் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனை தொடர்பில் எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி நீதிமன்றம் கட்டளை பிறப்பிக்கும்.

இவ்விடயம், இன்று காலை நீதிவான் கிரிஷாந்தன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிமன்றம் இத்திகதியை நிர்ணயித்து அறிவித்தது.

மேற்படி எழுச்சிப் பேரணி தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன் மற்றும் யாழ் நகர மேயர் வி.மணிவண்ணன் உட்படப் பலரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பொலிஸார் அவர்களுக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் 'பி' அறிக்கை தாக்கல் செய்து சட்ட நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர்.

இப்படி பெயர் குறிப்பிட்டோர் சார்பாக சட்டத்தரணிகள் நேரில் முன்னிலையாகி, இத்தகைய சட்ட நடவடிக்கை சட்ட முறையற்றது என வாதிட்டிருந்தனர்.

இந்த நிலையில் இவ்வழக்கு இன்று திங்கட்கிழமை காலையில் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இச்சமயத்தில் எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன், வி.மணிவண்ணன் உட் பட சம்பந்தப்பட்ட அனைவருக்குமாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், வி.திருக்குமரன், கே.சயந்தன், வி.மணிவண்ணன் உட்பட பதினொரு சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

அரச தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோனும், அரச சட்டத்தரணி மாதினி விக்னேஸ்வரனும் பிரசன்னமாகினர்.

"இந்தச் சமயத்தில் இந்த வழக்கில் எதிராளிகள் நீதிமன்ற விடயத்துக்குள் வருவதோ அவர்களது சட்டத்தரணிகள் முன்னிலையாவதோ சட்டத் தகுதியற்றது என்று அவர்கள் வாதிட்டனர். இந்த விவகாரம் தொடர்பில் எதிராளிகள் என்ற பெயரில் யாருக்கும் அழைப்பு அனுப்பப் படவில்லை. அவர்கள் எப்படி இந்த விடயத்தில் பிரசன்னமாகி வாதிடமுடியும்?" - என்று பூர்வாங்க ஆட்சேபனையை அரசுத் தரப்புக் கிளப்பியது.

அதற்குப் பதிலளித்து சுமந்திரன் வாதங்களை முன்வைத்தார்.

"பொலிஸார் எங்களிடம் வாக்கு மூலங்களைப் பெற்றுள்ளனர். எங்க ளுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அவர்களே தெரிவித்துள்ளனர். நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கையே ஆரம்பிக்க முடியாத ஒரு சட்டப் பிரிவின் கீழ் நாங்கள் குற்றமிழைத்த வர்களாகப் பெயர் குறிப்பிட்டு பொலிஸார் நீதிமன்றில் 'பி' அறிக்கை சமர்ப்பித்து சட்ட நடவடிக்கை என்ற பெய ரில் ஒன்றை ஆரம்பித்திருப்பதால் அதனைச் சட்ட ரீதியாக நீதிமன்றில் பிரசன்னமாகி, எதிர்கொண்டு, நீதிமன்றுக்கு சரியானதை எடுத்தியம்பும் சட்ட உரிமை எமக்குண்டு" என்றார் சுமந்திரன்.

இரு தரப்பு வாதங்களையும் செவி மடுத்த நீதிவான், அது சம்பந்தமான மேலதிக சமர்ப்பணங்களை எழுத்தில் சமர்ப்பிக்கப் பணித்து, பூர்வாங்க ஆட்சேபனை மீதான கட்டளை அந்த சமர்ப்ப ணங்களையும் கவனத்தில் எடுத்து மே 3ஆம் திகதி வழங்கப்படும் எனத் தெரிவித்து அத் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

# ஊடக சுதந்திரம் என்பது ஜனாதிபதியால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் அல்ல!

## கோட்டாவின் கருத்துக்கு அநுர பதிலடி



ஊடகங்களுக்கு அழுத்தம் கொடுக்கும், அச்சுறுத்தல் விடுக்கும் எந்தவொரு அதிகாரமும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கிடையாது.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சனிக்கிழமை தோறும் கிராமங்களுக்குச் சென்று மக்கள் குறை கேட்கிறார் என்ற போர்வையில் ஊடக பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றார். அரசுக்கு எதிராக அந் தவாரம் முன்வைக்கப்படும் குற்றச் சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வளமாக அதனை பயன்படுத்தி வரு கின்றார். ஆக மக்கள் பிரச்சினைகளுக்கு செவிமடுக்காது, தான் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கருத்து வெளியிட்டு வருகின்றார்.

குறிப்பாக கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மக்களுடனான சந்திப்பின்போது, சில ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் இலக்கு வைத்து ஜனாதிபதி உரை யாற்றினார்.

'எனக்குப் பாடம் கற்பிக்கத் தெரியும். படிப்பிக்க வேண்டிய விதமும் தெரியும். நான் ஊடக சுதந்திரத்தை வழங்கியுள்ளேன். 14 மாதங்கள் நாட்டை ஆண்டாலும் எந்தவொரு ஊடகங்களுக்கும் அழுத்தம் கொடுக்கவில்லை' என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். இதன்மூலம் ஊடகங்களுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய அதிகாரம் தனக்கு இருந்தும் அதனைப் பயன்படுத்தவில்லை என்ப தையே ஜனாதிபதி கூறவிளைகின்றார்.

அத்துடன், ஊடக சுதந்திரத்தை வழங்கியுள்ளாராம். ஊடக சுதந்திரம் என்பது ஜனாதிபதியால் வழங்கப்படும் அனுமதி பத்திரமோ அல்லது வரப்பிர சாதமோ கிடையாது. அது ஊடகங்களுக்கான உரிமையாகும்.

அதேபோல் கடந்த காலங்களில் ஊட கங்களுக்கு எப்படி பாடம் கற்பிக்கப்பட்டது என்பது எமக்குத் தெரியும். ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டன. தீயிட்டுக்கொளுத்தப்பட்டன. லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்டார். எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டார். இப்படி பல அச்சுறுத்தலான பாடங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, ஜனாதிபதி கற்பிக்கவுள்ள பாடம் என்பது நவீன ஊடகம் தொடர்பானதாக இருக்காது. அது அச்சுறுத்தலாகவும், அழுத்தமாகவுமே அமையும். ஊடகங்களுக்கு அழுத்தம் கொடுக்க கூடிய அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைக்காது. தனது நிகழ்ச்சி நிரலை ஆதரிக்கும் ஊடகங்களை அரவணைப்பதும், மக்கள் பக்கம் நின்று விமர்சிக்கும் ஊடகங்களை அச்சுறுத்துவதும் என இரட்டை நிலைப்பாட்டை ஜனாதிபதி கடைப்பிடிக் கக்கூடாது - என்றார்.

## ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க மறுக்கும்

# பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்



தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தை வழங்க மறுக்கும் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு எதிராக கொழும்பில் இன்று அமைதி ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர் மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் புதுக்கடை நீதிமன்ற வளாகத்துக்கு அருகில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தை நிர்ணயித்து தொழில் ஆணையாளரினால் அண்மையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த வர்த்தமானி அறிவித்தலை எதிர்த்து பெருந்தோட்டக் கம்பனிகள் உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தன.

இந்நிலையில் ஆயிரம் ரூபாவை வழங்காதிருப்பதற்கு பெருந்தோட்டக் கம்பனிகள் முன்னெடுக்கும் முயற்சிகளை கண்டித்து இன்று நீதிமன்றத்துக்கு அருகில் அமைதி ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

# யாழில் கொரோனாவால் வயோதிபப் பெண் சாவு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட வயோதிபப் பெண்ணொருவர் கொரோனா வைரஸ் தொற்று நோயால் உயிரிழந்தார் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று மாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவரிடம் முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையில் இன்று அவர் சிகிச்சை பயனின்றி உயிரி ழந்தார்.

யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்த 63 வயது வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த பெண் கடந்த வாரம் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவ விடுதியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில் நேற்று ஏற்பட்ட திடீர் மூச்சுத்திணறலையடுத்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

வயோதிபப் பெண்ணுக்கு நேற்று மருத்துவ சேவை வழங்கிய அதிதீவிர சிகிச்சை பிரிவு தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, வயோதிபப் பெண்ணின் சடலம் சுகாதார நடைமுறைகளின் கீழ் மின்தகனம் செய்யப்பட்டுள்ளது.

# மனச்சாட்சியுள்ள உறுப்புரிமை நாடுகள் பிரேரணையை எதிர்த்தே ஆகவேண்டும்

## இலங்கை அரசு கோரிக்கை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை மனச்சாட்சிக்கு விரோதமானது. எமது நாட்டை ஏதோ வொரு வகையில் பழிவாங்கும் வகை யில் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, மனச்சாட்சியுள்ள உறுப்புரிமை நாடுகள் இலங்கை மீதான பிரேரணையை எதிர்க்க வேண்டும்.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான பிரேரணை இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து பிரேரணை மீதான வாக்கெடுப்பு நாளை நடைபெறவுள்ளது. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவு வழங்கி பிரேரணையைத் தோற்கடிக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளிடம் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்தார். நாமும் பல நாடுகளின் முக்கியஸ்தர்களுடன் சந்திப்புக்களை நடத்தி பிரேரணையின் உள்நோக்கத்தையும், எமது நிலைப்பாட்டையும் எடுத் துரைத்திருந்தோம். எனவே, மனச்சாட் சியுள்ள நாடுகள் இலங்கை மீதான பிரேரணையை எதிர்க்க வேண்டும்.

இலங்கை அனைத்து நாடுகளுடனும் ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்புகின்றது. ஆனால், சில நாடுகள் எமது நாட்டை ஏதோ வொரு வகையில் பழி வாங்கும் வகையில் செயற்படுகின்றன. ஆனால், நாம் மனச்சாட்சியின் பிரகாரம் செயற்படுகின்றோம் - என்றார்.

# அரச கட்டமைப்பின் அசமந்தமே பசறை விபத்துக்குக் காரணம்!

## இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு



பசறையில் இடம்பெற்ற விபத்து கவலைக்குரிய என்ற போதிலும் , அது தவிர்த்திருக்கக் கூடியதாகும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவில் வழங்கப்படும் அறிவுரைகளை அரச அதிகாரிகள் முறையாகப் பின்பற்றாமையின் காரணமாகவே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று முன்னாள் பிரதியமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

பசறையில் இடம்பெற்ற விபத்து கவலைக்குரிய சம்பவமாகும். எனினும் இந்த விபத்து தவிர்த்திருக்கக் கூடிய தொன்றாகவே கருத முடிகின்றது. அரச ஊழியர்கள் மற்றும் அரச சேவையில் உள்ளவர்கள் தமது கடமைகளை உரிய முறையில் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றார். எனினும் அவர்கள் ஜனாதிபதியின் அறிவுரைகளை ஏற்றுக்கொண்டுள்ளார்களா என்பது பசறை விபத்து சம்பவத்தின் பின்னர் சந்தேகத்திற்குரியதாகியுள்ளது.

விபத்து இடம்பெற்ற குறித்த வீதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் உள்ளதாகும். அதே இடத்தில் பாரிய கற்பாறை ஒன்றும் சரிந்து வீதியின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் காணப்படுகின்றது. எனவே பொறுப்புக்கூற வேண்டிய அரச கட்டமைப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இவ்வாறான விபத்துக்களை தவிர்த்திருக்க முடியும். அரச அதிகாரிகள் இந்த தவறுக்கு பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு கடமையிலிருந்து தவறிய அதிகாரிகள் மீது அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறித்த வீதியில் காணப்பட்ட பாறை அகற்றப்பட்டிருக்க வேண்டும். அல்லது ஏதேனுமொரு பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். மறுப்புறம் பாரிய பள்ளம் காணப்படுகின்ற அந்த பகுதியில் பாதுகாப்பு வேலி அமைக்கப் படாமையும் எச்சரிக்கை பதாதைகள் இல்லாமையும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றன. எவ்வாறிருப்பினும் இனிவரும் காலங்களிலாவது அரச அதிகாரிகள் ஜனாதிபதியால் வழங்கப்படும் அறிவுரைகளை ஏற்று முறையாகச் செயற்பட வேண்டும்.

மக்கள் மீது கொண்டுள்ள அக்கறையின் காரணமாகவே ஜனாதிபதி இவ்வாறான அறிவுரைகளை தொடர்ச்சியாக வழங்கிக் கொண்டிருக்கிறார். எனினும் அவர் நேரடியாக மக்களுக்கான சேவைகளை முன்னெடுப்பதில்லை. அரச அதிகாரிகள் ஊடாகவே அவற்றை செய்கின்றார். அதிகாரிகளின் அசமந்த போக்கினால் பொது மக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே மக்களுக்கான சேவையை சிறந்த முறையில்செய்யவேண்டும்என்று உணர்ந்து அரச அதிகாரிகள் செயற்படவேண்டும். – என்றார்.

# கோப் குழுவில் முன்னிலையாகுமாறு ஸ்ரீலங்கா கிரிகெட் சபைக்கு அழைப்பு

எதிர்வரும் 06 ஆம் திகதி அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் மீண்டும் முன்னிலையாக ஸ்ரீலங்கா கிரிகெட் சபைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கடந்த பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி ஸ்ரீலங்கா கிரிகெட் சபை கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தது.

இதன்போது கிரிகெட் நிறுவனத்தின் அதிகாரிகள் உரிய தயார்ப்படுத்தலுடன் வருகைதராத காரணத்தால் அக்கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டு மீண்டும் ஒரு மாதத்தில் குழு முன்னிலையில் ஆஜராகுமாறு பணிக்கப்பட்டிருந்த நிலையிலேயே மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையிலான அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஏழு அரசாங்க நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதற்கமைய மார்ச் 23 ஆம் திகதி லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிடட் நிறுவனம் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருப்பதுடன், இலங்கையில் புதிய ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களை அமைக்கும் நடவடிக்கைகள் தொடர்பான மதிப்பீடு பற்றி மார்ச் 24ஆம் திகதி இக் குழுவில் ஆராயப்படவுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனம் எதிர்வரும் மார்ச் 26ஆம் திகதி கோப் குழுவில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இதனைவிடவும், ஏப்ரல் 07ஆம் திகதி தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்திச் சபையும், ஏப்ரல் 20ஆம் திகதி இலங்கை உதைபந்து சம்மேளனம் மற்றும் ஏப்ரல் 23ஆம் திகதி தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் என்பன அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

# 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு கிட்டுகின்றது அரச நியமனம்



10 ஆயிரம் பயிற்சி பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி அவர்கள் அனைவரும் நேற்று (திங்கட்கிழமை) முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தால் பயிலுநர்களாக இணைத்துக்கொள்ளப்பட்ட 14 ஆயிரம் பயிற்சி பட்டதாரிகளில் 10 ஆயிரம் பேர் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, அவர்களது பயிற்சிக்காலம் நிறைவு பெற்ற நிலையில், இந்த நியமனக் கடிதங்கள் மாவட்ட செயலக மட்டத்தில் நேற்று முதல் வழங்கப்பட்டுவருகின்றன என அமைச்சர் கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நிலைமையில் நிரந்தர சேவைக்கு இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையை திட்டமிட்டவாறு முன்னெடுக்க முடியவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிரந்தர நியமனம் பெறும் பட்டதாரிகளின் பெயர் பட்டியலை https://www.pubad.gov.lk/ என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பசற விபத்தின் எதிரொலியாக வாகன ரயர்கள் கண்காணிப்பு!

கொழும்பு, மார்ச் 23

தேய்வடைந்த டயர்களை பயன்படுத்தும் வாகனங்களை அடையாளம் காணுவதற்காக விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

தேய்ந்துபோன டயர்களுடன் வாகனம் ஓட்டும் நபர்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் தரமற்ற வாகனங்களைச் செலுத்துபவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா வரையும் அபராதமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான வாகனங்களை அடையாளம் காண திங்கள் முதல் மூன்று நாளகளுக்கு நாடு முழுவதும் சிறப்பு சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண குறிப்பிட்டார்.

இதேவேளை வீதி விபத்துக்கள் காரணமாக கடந்த 24 மணி நேரத்துக்குள் நாடு முழுவதும் எட்டு உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, நாளை புதன்கிழமை வரை இடம்பெறவுள்ள இந்த கண்காணிப்பு நடவடிக்கையின் போது, தேய்வடைந்த டயர்களை பயன்படுத்தும் வாகனங்களுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் , அத்தகைய வாகனங்களை செலுத்தி காயத்தை ஏற்படுத்தும் சாரதிகளுக்கு எதிராக 25 ஆயிரம் ரூபா அபராதமும் அறிவிடப்படும் என்றும் அவர் குறிப்பட்டார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண மேலும் கூறியதாவது:-

நாடளாவிய ரீதியில் தற்போது வீதி விபத்துகள் அதிகரித்து வருகின்றமை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இந்த விபத்துகளுக்கு வாகன சாரதிகளின் கவனக்குறைப்பாடு, மதுபோதை மற்றும் வாகனங்களின் குறைபாடுகளும் பிரதான காரணமாக விளங்குகின்றன.

இதனால் அவற்றை தடுக்கும் வகையில் விசேடசுற்றிவளைப்பொன்றைமேற்கொள்வதற்கு பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், திங்கட்கிழமை முதல் புதன் கிழமை வரை இந்த சுற்றிவளைப்புகள் இடம்பெறவுள்ளன.

இதன்போது தேய்வடைந்த டயர்களை பயன்படுத்தும் வாகனங்களை அடையாளம் கண்டு அவற்று எதிராக சட்டநடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்பாடுகள் தொடர்பில் பிரதேச பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன சட்ட விதிகளுக்கமைய வெளியிடப்பட்ட வர்த்தமானியில் வாகன சில்லுகள் தரமானதாக காணப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், 2009ஆம் ஆண்டு கொண்டு வரவரப்பட்ட மோட்டார் வாகன திருத்தச் சட்டத்தின் 145 ஆவது சரத்துக்கமைய போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒவ்வொரு வாகனமும் தரமான சில்லுகளை பயன்படுத்தியிருக்க வேண்டியது கட்டாயம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் , இவ்வாறு தரமற்ற சில்லுகளை பயன்படுத்தும் வாகனங்களை அடையாளம் காணுவதற்காகவே இந்த சுற்றிவளைப்பு இடம் பெறவுள்ளது.

இதன்போது தேய்ந்த சில்லுகளை பயன்படுத்திய வாகனங்களை அடையாளம் கண்டால், அவற்றுக்கு எதிராக 3500 ரூபா அபராதம் அறவிடப்படுவதுடன், அத்தகைய சில்லுகளை கொண்ட வாகனங்ககளை செலுத்தி விபத்தை ஏற்படுத்தி காயமடையச் செய்தால் வழமையான சட்டவிதிகளுடன், 25 ஆயிரம் ரூபா பணத்தொகை அபராதமாக அறவிடப்படும்.

# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள ஆக்கத்திறன் நிகழ்வு!



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் க.விமலநாதன், உதவி மாவட்ட செயலாளர் லிசோ கேகிதா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களின் ஆக்கத்திறன்களை பார்வையிட்டனர்.

குறித்த போட்டியில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கள்ளப்பாடு ஆதிவைரவர் அறநெறிப் பாடசாலை, வட்டுவாகல் சப்தகன்னிமார் அறநெறிப் பாடசாலை, முல்லைத்தீவு வீரகத்திப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, மாமூலை மகாவிஷ்ணு அறநெறிப் பாடசாலை, கணுக்கேணி கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பேச்சு, மாலை கட்டுதல், தோரணம் கட்டுதல், நிறைகுடம் வைத்தல், கோலம் போடுதல் ஆகிய போட்டிகளில் பங்கு பற்றியிருந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பிற்போடப்பட்ட குறித்த போட்டிகள் தற்போது நடாத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் ரயில் விபத்து நீதி கோரி போராட்டம்!





தலைமன்னார் பியர் பகுதியில் உள்ள ரயில் கடவையில் கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் தனியார் பஸ் ரயில் மோதி எற்பட்ட விபத் தில் உயிரிழந்த மாணவனின் மரணத் துக்கு நீதி கோரி நேற்று திங்கட்கிழமை காலை குறித்த பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், சர்வமதத் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் இணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தலைமன்னார் பியர் பகுதியில் உள்ள ரயில் கடவையில் கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் தனியார் பஸ் லயிலுடன் மோதி எற்பட்ட விபத்தில் தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்று வந்த பாலச்சந்திரன் தருண் (வயது -14) என்ற மாணவன் உயிரிழந்ததோடு, மாணவர்கள் பொது மக்கள் என 25 பேர் வரை பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த விபத்திற்கு நீதி கோரி போராட்டம் இடம் பெற்றது.

நேற்றுக் காலை 7.45 மணியளவில் தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு முன்பாக இந்தப் போராட்டம் ஆரம்பமானது.

இதன் போது பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், சர்வமத தலைவர்கள் அரசியல் பிரதி நிதிகள் ஆகியோர் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தலைமன்னார் பியர் பகுதியில் உள்ள ரயில் கடவை வரை பதாதைகளை ஏந்திய வாறு சென்றனர்.

இதன் போது போராட்டம் இடம்பெற்ற பகுதிக்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மல், மன்னார் பிரதேச செயலாளர், ரயில்வே திணைக்கள அதிகாரி ஆகியோர் சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களோடு கலந்துரையாடினர்.

இதன் போது பல்வேறு கோரிக்கைகளையும் அவர்கள் முன் வைத்தனர்.

குறிப்பாக ரயில் கடவைக்கான தடையைப் புதிதாக அமைத்து, அதற்கான பாதுகாப்பு ஊழியரை புதிதாக நியமிக்க கோரியும் குறிப்பாக வயோதிபர் இல்லாமல் நடுத்தர வயதுடையவர்களை கடமையில் ஈடுபடுத்தி, குறித்த ரயில் கடவையில் பொலிஸாரின் கண்காணிப்பு இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

இதன்போது குறித்த கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய உடனடியாக துரித நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் அரசாங்க அதிபர் உறுதியளித்தார். இந்நிலையில் குறித்த ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டமைகுறிப்பிடத்தக்கது.

## அகழ்வுப் பணிக்கு எதிர்ப்பு சுழற்சி முறை போராட்டம்!



கிளிநொச்சி உருத்திரீஸ்வரர் ஆலய வளாகத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அகழ்வு பணிக்கு எதிர்ப்பு தெரிவித்த சுழற்சி முறையினால் போராட்டம் நேற்று (திங்கட்கிழமை) ஆரம்பமானது.

குறித்த ஆலய வளாகத்தில் அகழ்வு பணிகள் நேற்று ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் காலை முதல் குறித்த வளாகத்தில் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, மதத் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## கொரோனாவிலிருந்து 299 பேர் குணமடைவு!

கொரோனா தொற்றில் இருந்து மேலும் 299 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனை அடுத்து கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 87 ஆயிரத்து 58 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது 90 ஆயிரத்து 200 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அதில் 2 ஆயிரத்து 596 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மேலும் இலங்கையில் இதுவரை கொரோனா தொற்றால் 546 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## ஐ.நா. விவகாரத்தைக் கையாள்வதற்கு இராஜாந்திர நடவடிக்கைகள் வேண்டும்!

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை விடயத்தை இலங்கை அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அக்கட்சியின் தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பின திஸ்ஸ அத்தநாயக்க, அமர்வின் முடிவில் இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டால் பொது மக்கள் பெரும் பாதிப்பை சந்திக்க நேரிடும் என கூறினார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை, இராணுவ மயமாக்கல் போன்ற விடயங்களை எடுத்துக்காட்டுகிறது என குறிப்பிட்ட அவர் இலங்கைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குறித்த தீர்மானம் பாராட்டத்தக்கதல்ல என்றும் கூறினார். எனவே இராணுவ மயமாக்கல் குறித்தும் அவர்கள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை மீறுவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிக்கக்கூடாது என்றும், இது மோதல்களுக்கு வழிவகுக்கும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

## புற்றுநோயிலிருந்து மீண்டார் சந்திரிகா



எனக்கு புற்றுநோய் இருந்தது. அதனை முதல் கட்டத்திலேயே கண்டறிந்தமையால் குணப்படுத்த முடிந்ததென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேலும் கூறியுள்ளவை வருமாறு –

நான் அரசியலில் மாத்திரம் பிரவேசித்து இருக்காவிட்டால் பணக்கார பெண்மணியாக இருந்திருப்பேன்.

இதேவேளை நானோர் உண்மையைக் கூற விரும்புகின்றேன். எனக்கு சில வருடங்களுக்கு முன்னர் மார்பக புற்றுநோய் இருந்தது. இவ்வாறு புற்றுநோய் ஏற்படுவதற்கு எந்தவொரு காரணமும் என்னிடம் இல்லை.

ஆனால் அதிகாரம் என்னிடம் இருந்து சென்றபோது மன ரீதியாக பாதிக்கப்பட்டதுடன் மிகவும் தனிமையில் இருந்தேன். இது தான் புற்றுநோய் ஏற்படுவதற்கு ஏதுவான காரணமாக இருந்திருக்க வேண்டும்.

மேலும் ஆரம்ப கட்டத்திலேயே இந்த நோயைக் கண்டறிந்தமையால், கதிரியக்க சிகிச்சையின் ஊடாகக் குணமடைந்தேன்.

அதாவது, மிகவும் ஆராக்கியமாக உள்ளேன் என்று கூறவில்லை. ஆனால் தற்போது உடல் நலத்தில் பிரச்சினையில்லை. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

Express Courier Services
அன்னா


விரைவுப் பொதிகள் சேவை
077 8889388
075 3305500
070 3305500
3-6 நாட்கள்
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம், சங்கானை, கல்வியங்காடு, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை, பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கனகராயன்குளம், மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு

## அறிவித்தல்

இலக்கம் 9, குருநகர் தொடர்மாடி, குருநகர், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பாக்கியநாதன் ஈஸ்மன் பீற்றர் (Packiyanathan Esman Peter) (வயது - 55) ஆகிய நான் பின்வரும் விடயங்களைத் தெரிவிக்கிறேன்.

1. எனது அடையாள அட்டையிலும் (இல. 652341446 V) பிறப்புச் சான்றிதழிலும் எனது பெயர் ESMAN PETER எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. எனது திருமணச் சான்றிதழிலும் பாஸ்போர்ட்டிலும் என் பெயர் ESMAN என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. எனது மகளின் பிறப்புச் சான்றிதழில் என் பெயர் ESMAN என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகையால் மேற்படி ESMAN என்றும், ESMAN Peter என்றும் குறிப்பிடப்படும் பெயர் என்னுடையவையே என்றும் என்னையே அவை இரண்டும் குறிப்பிடுகின்றன என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

P.Esman

வீடு வாடகைக்கு உண்டு
நல்லூர் கோவிலுக்கு அண்மையில் புதியவீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 0777977924